நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளவில்லை என்பதா?: தொல்.திருமாவளவன்

தொல்.திருமாவளவன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர் கருகியதால் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தரவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கில் பதில் மனு தாக்கல் செய்துள்ள டெல்டா மாவட்ட ஆட்சியர்கள், விவசாயிகள் எவரும் பயிர் கருகியதால் தற்கொலை செய்துகொள்ளவில்லை எனக் கூறியுள்ளனர். இது ஏற்கனவே மனம் நொந்து தவிக்கும் டெல்டா மாவட்டத்து விவசாயிகளுக்குப் பேரிடியாக அமைந்திருக்கிறது. உண்மைக்கு மாறான தகவலை நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சியர்கள் அளித்திருப்பது தமிழக அரசுக்குத் தெரியாமல் நடந்திருக்க முடியாது. அவர்களது கூற்றுக்கு தமிழக அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இதுவரை 10க்கும் மேற்பட்ட விவசாயிகள் அவ்வாறு தற்கொலை செய்துகொண்டிருப்பதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் குடும்பத்தினர் துயரத்தில் பரிதவிக்கின்றனர். அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தேற்ற வேண்டிய அரசு இப்படி ஒரு நிலையை எடுத்திருப்பது கண்டனத்துக்குரியதாகும்.தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் திருத்தப்பட்ட மனுவை தாக்கல் செய்ய வேண்டுமென்றும், தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் குடும்பத்திற்கு உரிய இழப்பீட்டை வழங்கிட முன்வரவேண்டுமென்றும் கூறியுள்ளார்

# கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு தொழில் பயிற்சிகள் குறித்து ஜன.28-ல் இலவச பயிலரங்கு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடத்தப்படும் கால்நடை மற்றும் கோழி வளர்ப்புப் பயிற்சிகள் குறித்த இலவச விழிப்புணர்வு பயிலரங்கம் சென்னையில் திங்கள்கிழமை (ஜன.28) நடைபெறுகிறது.

பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தியவர்கள், இளைஞர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கு கால்நடை வளர்ப்பில் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் பல்கலைக்கழகத்தின் சார்பில்

நடத்தப்படுகின்றன. இந்தப் பயிற்சிகள் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மையங்களில் நேரடியாக வழங்கப்படுகின்றன.இந்தப் பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கம் சென்னை மாதவரத்தில் உள்ள பல்கலைக்கழக தலைமை வளாகத்தில் உள்ள உழவர் இல்லத்தில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறுவதாக பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்குநர் கே.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

பயிலரங்கில் பங்கேற்க விரும்புவோர் 044-25554411 என்ற தொலைபேசியிலோ, 9884136148 என்ற செல்போன் எண்ணிலோ பதிவு செய்யலாம். பதிவு செய்யும் முதல் 200 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடலாடியை வரட்சி பகுதியாக அறிவிக்க கோரி ஆர்பாட்டம்

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகா இந்த ஆண்டு பருவமழை பொய்து விவசாயம் பெரிதும் பாதிக்கபட்டது.இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.எனவே கடலாடி பகுதியை வரட்சி பகுதியாக தமிழக அரசு அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரண உதவிதொகை மற்றும் பயிர் காப்பீட்டுதொகை வழங்ககோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்பாட்டம் நடத்தினர். கடலாடி தாலுகா தலைவர் கருப்பையா தலைமையும் ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் முத்துராமு,மாவட்ட விவசாயதொழிலாலர்கள் சங்க துணைத்தலைவர் மகில்வாகனன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

ஆர்பாட்டத்தில் தாலுகா விவசாய சங்க செயலாளர் ரெங்கராஜ், பொருலாளர் பெரியசாமி, துணைத்தலைவர் குருசாமி, துணைசெயலாளர் ஜீவரத்தனம், தாலுகா குழு உருப்பினர்கள் ராமசந்திரன்,வேலாயுதம், சிவன்பெருமாள், சொக்கலிங்கம், தாலுகா விவசாய் தொழிலாளர் சங்க செயலாளர் ஜீவராஜ், மற்றும் 10 பெண்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்துகொண்டார்கள்.கடலாடி தாலுகா அளவில் நடந்த விவசாய லோன் மேலா நிகழ்ச்சியில் கடன் உதவித்தொகை பெற விவசாயிகளிடம் வாங்கபட்ட விண்ணப்ப மனுக்கள் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கபடாததற்கும் ஆர்பாட்டத்தில் கண்டனம் தெரிவித்து விரைவில் கடன் உதவிதொகை வழங்க வலியுறுத்தியும் கேட்டுகொண்டனர்.

# டெல்டா விவசாயிகளுக்கான இழப்பீடு: அரசு ஆலோசனை

காவிரி டெல்டா விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து தலைமைச் செயலாளர் தலைமையில் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடைபெற்றது. இழப்பீடுகள் பற்றிய முழு விவரங்கள், ஓரிரு நாள்களில் வெளியிடப்படும் என தலைமைச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காவிரி டெல்டா பகுதிகளில் விவசாயத்துக்குத் தேவையான நீர் இல்லாத காரணத்தால் பயிர்கள் கருகி வருகின்றன. அங்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து ஆராய நிதியமைச்சர்

ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் எட்டு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்தது.

அமைச்சர்கள்- அதிகாரிகள் அடங்கிய குழு ஆய்வுப் பணியை முடித்ததும், சென்னையில் முதல் கட்டமாக ஆலோசனைக் கூட்டம் நடத்தியது. இந்தக் கூட்டத்தில் ஆய்வின்போது எடுக்கப்பட்ட விவரங்கள் தொகுக்கப்பட்டன.

இதையடுத்து, தலைமைச் செயலாளர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (ஜனவரி 22) மாலை ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இழப்பீட்டின் அளவு குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதுகுறித்த விவரங்கள், முதல்வர் ஜெயலலிதாவின் கவனத்துக்கு ஓரிரு நாள்களில் கொண்டு செல்லப்பட்டு அவரின் ஒப்புதலுடன் வெளியிடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சிவில் வழக்குத் தொடரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உரிமைக்கு விலை

காவிரி நீர் கிடைக்காமல் சம்பா சாகுபடியில் தமிழக விவசாயிகள் அடைந்த இழப்பை கர்நாடக அரசுதான் ஈடு செய்ய வேண்டும் என வழக்குத் தொடுக்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்திருப்பது பலருடைய புருவங்களை உயர்த்தியிருக்கிறது.

"முன்னெப்போதும் இல்லா வழக்கம்' என்று தோன்றினாலும், பாசனநீர், குடிநீர் இரண்டுக்கும் விலை நிர்ணயிக்க மத்திய அரசு நீர்க் கொள்கை அறிவிக்கும்போது, தமிழகத்துக்கு உரிமையான தண்ணீர் இல்லாததால் ஏற்பட்ட இழப்புக்கு கர்நாடகம்தானே பொறுப்பாக முடியும்?

பற்றாக்குறை காலத்துக்கான தண்ணீர் பகிர்வு அளவுகளை வைத்துப் பார்த்தாலும்கூட, கர்நாடக அணைகளில் தேங்கிய தண்ணீர் அளவை வைத்துக் கணக்கிடும் வேளையில், தமிழகத்துக்குக் குறைந்தது 30 டி.எம்.சி. தண்ணீர் நிலுவை இருக்கிறது. இது தமிழகத்துக்கு உரித்தான தண்ணீர். உரிமைப் பங்கு. இதை கர்நாடகமே பயன்படுத்திக்கொண்டது. இதனால் நாம் அடைந்த நஷ்டத்துக்கு அவர்கள்தானே பொறுப்பு?

கர்நாடக அரசு இதுவரை தமிழக அரசுக்குத் தர வேண்டிய தண்ணீரை முழுமையாக வழங்கவில்லை. நீதிமன்றத் தலையீடு, காவிரி கண்காணிப்புக் குழுவின் கண்டிப்பு ஆகியவற்றால் வேறுவழியில்லாமல் ஏதோ கொஞ்சம் தண்ணீர் வீட்டதே தவிர, தமிழகத்துக்கு ""தண்ணி காட்டும்" போக்கை நிறுத்தவே இல்லை.

2011-இல் குறிப்பிட்ட காலத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு சம்பா சாகுபடி நடந்தபோது, அப்போதும் கர்நாடகம் முழுமையாக தண்ணீரைத் திறந்துவிடவில்லை என்றாலும், பருவமழை பரவலாகப் பெய்ததன் காரணமாக 21 லட்சம் டன் நெல் கொள்முதல் ஆனது. ஆனால் அதே நிலைமை இப்போது கிடையாது. தமிழக விவசாயச் சங்கங்களின் கூற்றுப்படி, மொத்தத்தில் 50 விழுக்காடு நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, டெல்டா பகுதியில் ஆங்காங்கே பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழக விவசாயிகளின் பயிர் இழப்பை ஈடுசெய்யும் நடவடிக்கையாக, அவர்களது நெல் சாகுபடி செய்யப்பட்ட வயல்களுக்கு காப்பீட்டு சந்தாத் தொகையை அரசே செலுத்த முன்வந்தது. இதற்காக ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்தது. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் சொட்டுநீர் பாசனக் கருவிகளை விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்த மானியம் அறிவித்தது. சுமார் 70 கோடி ரூபாய் அளவுக்குத் தமிழக அரசுக்குக் கூடுதல் நிதிச்சுமை ஏற்படக் காரணம் - கர்நாடகம் உரிய நேரத்தில் நமது உரிமைப் பங்கு நீரைத் திறந்துவிடவில்லை என்பதுதான்.

தமிழக அரசு காவிரி நீர்இல்லாமல் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு ஏக்கருக்கு ரூ.13,692 கிடைப்பதை உறுதி செய்தாலும், தமிழக விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் கேட்டு டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நெல் உற்பத்தி பாதியாகக் குறைந்து போனது ஒருபுறம் இருக்க, விவசாயிகளின் நஷ்டத்தையும் ஏற்கும் நிதிச்சுமை தமிழகத்துக்கு மட்டுமே ஏற்படுவது எந்த வகையிலும் சரியல்ல.

பருவமழை பொய்த்திருந்தால், அதற்கு வேறு யாரையும் குற்றம் சொல்ல முடியாது. ஆனால் கர்நாடக அணைகளில் தண்ணீர் இருந்தும்கூட, சுயநலப் போக்குடன் அவர்களே அதைப் பயன்படுத்தினார்களே தவிர, தமிழ்நாட்டுக்குத் திறந்துவிடவில்லை. உள்ளதைப் பகிர்ந்து விவசாயம் செய்வோம் என்ற மனநிலையைப் பெற மறுத்தது கர்நாடக அரசு. காவிரி நீர் கொடுக்காமல் ""ஏற்படுத்தப்பட்ட" இந்த இழப்புக்கு, இதற்குக் காரணமான கர்நாடக அரசுதானே பொறுப்பேற்க வேண்டும்?

பயிர் இழப்பு மற்றும் நிவாரண உதவிகள் குறித்து ஆய்வு செய்து, அறிக்கை அளிக்க நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான குழு அண்மையில் டெல்டா மாவட்டங்கள் அனைத்திலும் ஆய்வு செய்து திரும்பியுள்ளது. இந்தக் குழு ஓரிரு தினங்களில் தனது அறிக்கையை அளிக்கும். தமிழக காவிரி டெல்டா பகுதியில், காவிரிநீர் இல்லாததால் எவ்வளவு விவசாய நிலங்களில் பயிர்கள் அழிந்தன, அல்லது விளைச்சல் குறைந்தது என்பதை இந்தக் குழு பட்டியலிடும். அதனடிப்படையில்தான் இழப்பீட்டுத் தொகையை தமிழக அரசு நீதிமன்றத்தில் முறையீடும்.

தமிழக அரசு தொடுக்கப்போகும் வழக்கை நீதிமன்றம் ஏற்குமா, அல்லது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யுமா என்ற கேள்விகள் ஒருபக்கம் இருந்தாலும்,இந்த வழக்கின் நியாயம் எவருக்கும் எளிமையாகப் புரியக்கூடியதுதான். இரு சகோதரர்களுக்குச் சொந்தமான ஒரு வீட்டின் வருவாயை ஒருவரே அனுபவித்தால், அதற்காக மற்றவர் எவ்வாறு சிவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தனக்கான தொகையைப் பெற முடியுமோ, அதே நியாயத்தின்படி கர்நாடக அரசு பயன்படுத்திக்கொண்ட, தமிழகத்துக்குச் சேர வேண்டிய உரிமை நீர் அளவுக்கு ஏற்ப விலையை கொடுத்தே ஆக வேண்டும்.

காவிரி நீருக்கு தமிழக விவசாயிகள், ஆயக்கட்டுதாரர் உரிமையைப் பெற்றுள்ளனர். பொதுவான காலகட்டத்தில் எவ்வளவு நீர் தமிழ்நாட்டுக்கு உரிமைப் பங்கு, பற்றாக்குறை காலத்தில் தமிழகத்தின் உரிமைப் பங்கு எவ்வளவு என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறுதித் தீர்ப்பு இன்னும் அரசிதழில் வெளியாகவில்லை என்பதாலேயே கர்நாடகம் எப்படியும் நடந்துகொள்ளலாம், தமிழகத்துக்கு தண்ணீர் தராமல் இருக்கலாம் என்ற போக்குக்கு இந்த வழக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க உதவும். மேலும், நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியாவதைத் தடுப்பது அரிது என்று கர்நாடக அரசுத் தரப்பில் வாதாடும் வழக்குரைஞர்களே

கூறியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ள சூழலில் இந்த வழக்கை நீதிமன்றம் ஏற்கும் என்றே நம்பலாம்.

எங்கள் உரிமைப்பங்கு நீரைக் கொடு. அல்லது அதற்கு உரிய விலையைக் கொடு!

# விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாக தொடங்க வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், சிதம்பரம் உதவிஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

வட்டச் செயலர் கே.கண்ணன் தலைமை வகித்தார். வட்டத் தலைவர் எல்.ஜீவா, ஒன்றியத் தலைவர்கள் எஸ்.சுப்பிரமணியன், சி.தர்மதுரை, ஜே.எம்.ஜின்னா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கோ.மாதவன், துணைத் தலைவர் பி.கற்பனைச்செல்வன், மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜி.ரமேஷ்பாபு ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

# ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் கத்தரிக்காய் கிலோ ரூ. 40

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் செவ்வாய்க்கிழமை கத்தரிக்காய் கிலோ 40 ரூபாய்க்கு விற்பனையாகியது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தைக்கு பல தரப்பட்ட காய்கறிகள் தினசரி விற்பனைக்கு வருகின்றன. இந்த காய்கறிகள் அனைத்தும் ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் விற்பனைக்கு வருகின்றன. இங்கு விற்பனை செய்யப்படும் காய்கறிகள் 90 சதவீதம் கேரளத்துக்கு அனுப்பப்படுகிறது. 10 சதவீதம் மட்டுமே சென்னை, தஞ்சாவூர், மதுரை, ராமேசுவரம், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை, சந்தையில் விற்பனையான காய்கறிகளின் விலை விவரம் (1 கிலோ): செடி முருங்கை- 28, கரும்பு முருங்கை- 31, மர முருங்கை- 28, தட்டப்பயிர்- 18, பீன்ஸ்- 15, பாகற்காய்- 7, புடலங்காய்- 8, பெல்லாரி வெங்காயம்- 20, சின்ன வெங்காயம்- 35, காலிபிளவர் (20 பூ) பை- 120, தக்காளிப் பெட்டி (14 கிலோ)- 80 முதல் 100 வரை, கத்தரி டிஸ்கோ- 270, கத்தரி வெள்ளை- 800, கத்தரி பச்சை- 350, வெண்டைக்காய்- 17, சுரைக்காய்- 5.

கடந்த வாரத்தில் வெள்ளைக் கத்தரிக்காயின் விலை கிலோ 30 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த வாரத்தில் ஒரு கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

# கொடைக்கானலில் கறவை மாடுகளுக்கு இலவச மருந்து

கொடைக்கானல் பகுதிகளிலுள்ள கறவை மாடுகளுக்கு உண்ணிப் பூச்சி தாக்காமல் இருப்பதற்கு, அட்மா திட்டத்தின் கீழ் இலவச காம்ப்ளக்ஸ் மருந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

கொடைக்கானல் பகுதிகளிலுள்ள கறவை மாடுகளுக்கு தற்போது ஒட்டுண்ணி தாக்கி வருவதாக, விவசாயிகள் கால்நடைத் துறை மருத்துவர்களிடம் புகார் தெரிவித்திருந்தனர். அதையடுத்து, அட்மா திட்டத்தின் மூலம், கறவை மாடுகள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு காம்பளக்ஸ் மருந்து மற்றும் அவற்றின் தெளிப்பான்களும் இலவசமாக வழங்கும் நிகழ்ச்சி செண்பகனூரில் நடைபெற்றது.

இது குறித்து, கால்நடை மருத்துவர் ஹக்கீம் கூறியதாவது:ஒட்டுண்ணி நோய் தாக்கி வருவதுடன், ஒட்டுண்ணி பூச்சியும் இருந்து வருவதால், கறவை மாடுகளால் அதிக அளவு பால் கொடுக்க முடிவதில்லை. எனவே, அவற்றை தடுக்கும் பொருட்டு, அட்மா திட்டத்தின் மூலம் நோய் எதிர்ப்பு மற்றும் மீண்டும் வராமல் தடுக்கக் கூடிய காம்ப்ளக்ஸ் மருந்தும், அதற்குரிய தெளிப்பானும் இலவமாக வழங்கப்பட்டது. முதற்கட்டமாக, செண்பகனூர் பகுதியில் 20 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து, கொடைக்கானல் பகுதிகளிலுள்ள அனைத்து விதமான கறவை மாடுகள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் வழங்கப்படும். மேலும், 3 மி.லி. மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து மாடுகளின் மேல் தெளிப்பான் மூலம் தெளிக்கவேண்டும் என்றார்.

இந் நிகழ்ச்சியில், அட்மா திட்டத்தின் பயனாளிகள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

# விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

ராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, உரிய நிவாரணம் கோரி பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதற்கு விவசாயிகள் சங்க தாலுகா தலைவர் இ.ஆறுமுகம் தலைமை வகித்தார். துணைத் தலைவர் சி.லெட்சுமணன், துணைச் செயலர்கள் உ.தர்மராஜ், பெ.பூக்கடம்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாலுகாச் செயலர் ஐ.ஜெயராஜ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்துப் பேசினார்.

இதில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்க தாலுகா செயலர் எம்.மலைராஜ், இந்திய மாணவர் சங்க மாவட்டத் தலைவர் தி.ராஜா, த.மு.எ.க.ச. மாவட்டச் செயலர் ஏ.கோபாலகிருஷ்ணன் பேசினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தாலுகாச் செயலர் வி.காசிநாததுரை, விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் ஆர்.ஞானவாசகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# எரிவாயுக் குழாய் அமைக்கும் திட்டம்:ஆலோசனைக் கூட்டத்துக்கு விவசாயிகள் எதிர்ப்பு

எரிவாயு (காஸ்) குழாய் அமைக்கும் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள், ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை கூடி ஆட்சியரிடம் முறையிட்டனர்.

கேரள மாநிலம், கொச்சியில் இருந்து பெங்களூருக்கு எரிவாயுக் குழாய் கொண்டு செல்லும் திட்டத்தை மத்திய அரசு நிறுவனமான கெயில் (காஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா) நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

இதற்காக கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள 126 கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் வழியாக 310 கி.மீ. தூரம் குழாய்கள் பதிக்கப்பட உள்ளன. விவசாய நிலங்கள் வழியாக இக்குழாய்கள் பதிக்கப்படுவதற்கு பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டத்தில், காங்கயம் வட்டாரத்தில் உள்ள கத்தாங்கண்ணி, அவிநாசி வட்டாரத்தில் உள்ள சர்க்கார் கத்தாங்கண்ணி, ஊத்துக்குளி, பொங்கலூர் அருகே பெருந்தொழுவு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

விவசாயிகளை சமாதானப்படுத்த வருவாய்த் துறை அதிகாரிகள் இதுவரை 12 முறை கூட்டங்களை நடத்தி உள்ளனர். ஆனால் விவசாயிகள் நிலங்களைக் கொடுக்க மறுத்து வருகின்றனர்.

இந்நிலையில் "கெயில் நிறுவனம் கையகப்படுத்தும் நிலத்துக்கு சந்தை மதிப்பில்

இழப்பீடு வழங்கப்படும்' என்று ஆட்சியர்கள் மாநாட்டில் முதல்வர் ஜெயலிலதா அறிவித்திருந்தார்.

இதையடுத்து விவசாயிகளை சமாதானப்படுத்தும் முயற்சியை மீண்டும் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

இதற்காக நிலம் கொடுக்க சம்மதம் தெரிவித்திருந்த அவிநாசி வட்டம்- இச்சிபாளையம், பல்லவராயன்பாளையத்தைச் சேர்ந்த தலா 4 விவசாயிகளுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பட்டிருந்தது.

இந்த 8 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஆட்சியர் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து தகவல் பரவியதும், 30-க்கு மேற்பட்ட விவசாயிகள் ஆட்சியர் அலுவலகத்தில் கூடி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், அழைக்கப்பட்டிருந்த 8 விவசாயிகளும் ஆட்சியரைச் சந்திக்க மறுத்துவிட்டனர்.

அனைத்து விவசாயிகளையும் அழைத்து ஆட்சியர் கோவிந்தராஜ் பேசினார். அப்போது "சில விவசாயிகளுக்கு மட்டும் இழப்பீடு தரக் கூடாது.

நிலமெடுக்கத் திட்டமிட்டிருக்கும் அனைத்து விவசாயிகளையும் அழைத்துப் பேசி முடிவு எடுக்க வேண்டும்' என்று விவசாயிகள் வலியுறுத்தினர். அனைத்து விவசாயிகளையும் அழைத்துப் பேசுவதாக ஆட்சியர் உறுதியளித்தார்.

இதுகுறித்து போராட்டக் குழு அமைப்பாளர் முத்துசாமி கூறியது:

தற்போது எரிவாயுக் குழாய் அமைக்கும் பணி காரணமாக ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலங்கள் துண்டாடப்படும் சூழல் உருவாகி, விவசாயிகள் கடும் பாதிப்பைச் சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

குழாய் பதிக்கப்பட்ட நிலத்தில் 65 அடிக்கு எந்தப் பணிகளையும் செய்யக் கூடாது என்றும் நிபந்தனை உள்ளது. இத்திட்டத்தால் விவசாயிகளின் வாழ்வாதரம் கடுமையாகப் பாதிக்கப்படும். எனவே நெடுஞ்சாலை, ரயில் பாதை, ஆற்றங்கரை ஓரங்களில் இந்தக் குழாய்களை கொண்டுசெல்ல வேண்டும் என்றார்.

# டெல்டா விவசாயிகள் தற்கொலை: சிபிஐ விசாரணை தேவை

காவிரி டெல்டா விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களை சிபிஐ விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறினார் இந்திய மக்கள் இயக்கத்தின் தலைவர் செ.நல்லசாமி.

தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கத்தின் செயற்குழுக் கூட்டம் உடுமலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்த செ.நல்லசாமி செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தின் டெல்டா மாவட்டம் உள்ளிட்ட பல இடங்களில் கடுமையான வறட்சி நிலவுகிறது. விவசாயம் பொய்த்துவிட்ட நிலையில் கடன்களைக் கட்ட முடியாத விவசாயிகள் 10-க்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனால் தமிழகத்தில் விவசாயிகள் யாரும் தற்கொலையே செய்து கொள்ளவில்லை என்று தமிழக அரசு கூறி வருகிறது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆகவே தமிழகத்தை உடனடியாக வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும். இந்தியாவில் ஆண்டுதோறும் உருவாகும் 70 ஆயிரம் டிஎம்சி தண்ணீரில் 20 ஆயிரம் டிஎம்சி தண்ணீரை மட்டுமே உபயோகப்படுத்துகிறோம். மீதமுள்ள 50 ஆயிரம் டிஎம்சி தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இந்தியாவில் உள்ள நதிகளை இணைத்தால் விவசாயம் மேம்படும் என்றார்.

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகிகள் டி.வேலாயுதம், நா.துரை, பி.நாராயணசாமி, ஜி.ராமநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூரிலும் ஆலோசனை: இந்திய மக்கள் இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் திருப்பூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் கள அமைப்பாளர் நல்லசாமி தலைமை வகித்தார். தமிழ்நாடு கள் இயக்க மாநில அமைப்பாளர்கள் கதிரேசன், சிப்பி முத்துரத்தினம், தமிழக விவசாயிகள் சங்கத்தின் வேலுசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெட்ரோல் டீசலுக்கு பதிலாக எத்தனால் பயன்படுத்தினால் மட்டுமே நாடு வல்லரசாகும். தமிழக அரசும், மத்திய அரசும் 2013-14 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன் விவசாயிகள் தரப்புக் கருத்துக்களை கேட்டறிய வேண்டும். ஈமு கோழித் திட்டம் ஒரு மோசடித் திட்டம் என்று விவசாயிகள் சங்கம் தொடக்கத்திலிருந்தே எச்சரித்து வந்தது. மாவட்ட நிர்வாகமும், மாநில அரசும் அதைக் கண்டுகொள்ளவே இல்லை.

தற்போது ஈமு கோழிகளுக்கு அரசு தீவனம் போட்டு காப்பாற்றி வருகிறது. மக்களின் வரிப்பணத்தை வீணடிக்கும் செயலை இக்கூட்டம் கண்டிக்கிறது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# விதை கிராம பயிற்சி திட்ட முகாம்

வேளாண் துறை சார்பில் விதை கிராம பயிற்சி திட்ட முகாம் அரக்கோணத்தை அடுத்த செய்யூர் ஊராட்சி அவிநாசிகண்டிகை கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு வேளாண்துறை அரக்கோணம் உதவி இயக்குநர் எம்.வி.கிருஷ்ணாரெட்டி தலைமை தாங்கினார்.

இதில், விரிஞ்சிபுரம் வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் ப.ஸ்ரீதர் பங்கேற்று நிலக்கடலை சாகுபடி குறித்தும் சிறந்த விதைகளை தேர்வு செய்வது குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

செய்யூர் ஊராட்சி மன்றத் தலைவர் சீனிவாசன், உதவி வேளாண் அலுவலர் சி.அன்பரசு, வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை திட்ட மேலாளர் செ.முத்தமிழ்செல்வன், தொழில்நுட்ப வல்லுநர்கள் வி.ஹெச்.ஹேமந்த்குமார், ராஜீவ்காந்தி ஆகியோர் விவசாயிகளுக்கு விதைநேர்த்தியை செய்து காட்டினர். மேலும் விவசாயிகள் குழுக்களாக செயல்படுவது குறித்தும் விளக்கினர்.

# பிப்ரவரியில் சாத்தனூர் அணை திறக்கப்படும்

திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த 85 ஏரிகள் மூலம் 7,543 ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில், பிப்ரவரி மாதத்தில் சாத்தனூர் அணை திறக்கப்படும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாத்தனூர் அணை மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 19,463 ஏக்கர், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 30,537 ஏக்கர் என மொத்தம் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. 7,321 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கி வைக்கும் வகையில் 119 அடி உயரத்தில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

அணையின் வலதுப்புற கால்வாய் மூலம் 45 ஏரிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு இதன் மூலம் 21 ஆயிரம் ஏக்கரும், இடதுப்புற கால்வாய்கள் வழியாக 40 ஏரிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு இதன் மூலம் 24 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெற்று வருகின்றன.

சாத்தனூர் அணை கட்டுவதற்கு முன்னதாக அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்து செல்லும் தண்ணீரை விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூரைச் சேர்ந்த பழைய ஆயக்கட்டுதாரர்கள் பயன்படுத்தி வந்தனர். சாத்தனூர் அணை கட்டப்பட்டதால் அவர்களுக்கு தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் செல்வது தடுக்கப்பட்டது.

எனவே, ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயிலூர் பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கு 5 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் திறந்து விட வேண்டும் என அரசு நிர்ணயித்துள்ளது.

இந்நிலையில், சாத்தனூர் அணையில் 89 அடி உயரத்துக்கு 2342 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கி இருந்தது. இதில், திருக்கோயிலூர் பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கு சேர வேண்டிய 432 மில்லியன் கன அடி தண்ணீரை தென்பெண்ணை ஆறு வழியாக திறந்து விடுவது குறித்தும், மீதமுள்ள 546 மில்லியன் கன அடி தண்ணீரை அணையின் வலது மற்றும் இடதுப்புற கால்வாய்கள் வழியாக திறந்து விடுவது குறித்தும் அண்மையில் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் மற்றும் இரு மாவட்ட அதிகாரிகளுடன் விவாதிக்கப்பட்டது.

பிப்ரவரியில் அணை திறப்பு: இதையடுத்து, பிப்ரவரி 20-ம் தேதி சாத்தனூர் அணையின் வலது, இடது கால்வாய்கள் மூலம் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடலாம் என்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அணையைத் திறக்க அரசு உத்தரவு கிடைத்தவுடன் தண்ணீர் திறக்கப்படும். செவ்வாய்க்கிழமை (ஜனவரி 22) இரவு வரை அரசு உத்தரவு வரவில்லை என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உரிமை நீர் திறப்பு: இந்நிலையில், திருக்கோயிலூர் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்காக அவர்களின் உரிமை நீரான 432 மில்லியன் கன அடி தண்ணீர் இப்போது திறக்கப்பட்டுள்ளது. திங்கள்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை இரவு வரை விநாடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை தொடர்ந்து 4 நாள்களுக்கு விநாடிக்கு 750 கன அடி வீதம் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

5.8 மெகா வாட் மின் உற்பத்தி: சாத்தனூர் அணை புனல் மின் நிலையம் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் 5.8 மெகாவாட் மின் உற்பத்தியும் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# "கருகும் பயிர்களைக் காக்க இலவச நுண்ணுயிர் திரவம்'

கருகும் நிலையில் உள்ள சம்பா பயிர்களைக் காப்பாற்ற பிபிஎப்எம் என்ற நுண்ணுயிர் திரவம் அனைத்து வயல்களுக்கும் இலவசமாக தெளிக்கப்பட உள்ளது என்றார் வேளாண்துறை பேராசிரியர் ஆர். மாரிமுத்து.

பூதலூர் பகுதியில் கருகும் நிலையில் உள்ள சம்பா பயிர்களில் பிபிஎப்எம் என்ற நுண்ணுயிர் திரவம் இலவசமாக தெளிக்கும் பணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் எஸ். ராஜா இந்தத் திரவம் தெளிக்கும் பணியை தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு தலைமையேற்ற தஞ்சாவூர் வேளாண்துறை அலுவலர் மாரிமுத்து கூறியது:

தமிழக முதல்வரின் சம்பா கூடுதல் சிறப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில், வறட்சியால் பாதிக்கப்பட்ட சம்பா நெல் பயிர்களை காப்பாற்ற பிபிஎப்எம் என்ற நுண்ணியிர் திரவம் தெளிக்கப்படுகிறது. இதன் மூலம் கருகும் நிலையில் உள்ள பயிர்களை 7 முதல் 10 நாட்கள் வரை வறட்சியிலிருந்து காப்பாற்ற முடியும்.

ஒரு ஏக்கருக்கு ஒரு மில்லி பிபிஎம்எம் நுண்ணுயிர் திரவத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலமாக தெளிக்க வேண்டும். பயிர்கள் பூ பூக்கும் நிலையில் இருந்தால் மாலை 4 மணிக்கு மேல் தெளிக்க வேண்டும். மற்ற பயிர்களில் எந்த நேரம் வேண்டுமானாலும் தெளிக்கலாம்.

இந்தத் திட்டத்தில் பயன்பெற தஞ்சாவூர், காட்டுத் தோட்டம், மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியரை அணுகலாம். அலைபேசி எண் 94434 50818.

பூதலூர் வட்டார விவசாயிகள் பூதலூர் அக்ரி கிளினிக் பணியாளர் கே. ரவீந்திரன் மற்றும் வேளான் மையத்தையும் அணுகலாம். அலைபேசி எண் 83445 76222. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் பேராசிரியர் மாரிமுத்து. நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர்கள் முகமது பாரூக், ராஜேந்திரன், ரவிந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மேட்டூர் அணை நீர்மட்டம்: 34.27

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 34.27 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 393 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 700 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

# பூம்புகாரில் நன்னீர் மீன் வளர்ப்பு பயிற்சி

நாகை மாவட்டம், பூம்புகாரில் உள்ள எம்.எஸ். சுவாமிநாதன் மீன் ஆராய்ச்சி நிறுவனத்தில் இலவச நன்னீர் மீன் வளர்ப்புப் பயிற்சிஅளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மைய இயக்குநர் வ.சி. பரமசிவன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையம் மற்றும் பூம்புகாரில் உள்ள எம்.எஸ். சுவாமிநாதன் மீன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், நன்னீர் மீன் வளர்ப்புப் பயிற்சி ஜன. 28-ம் தேதி முதல் பிப். 2-ம் தேதி வரை நடைபெறுகிறது.

ஆண், பெண் இருபாலரும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கலாம். பயிற்சியின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் பங்கேற்பதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி- 8-ம் வகுப்பு தேர்ச்சி. வயது வரம்பு- 18 முதல் 45 வரை. பயிற்சி நாள்களில் மதிய உணவு வழங்கப்படும்.

இப்பயிற்சிக்கான நேர்காணல் பூம்புகாரில் உள்ள எம்.எஸ். சுவாமிநாதன் மீன் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஜன. 24-ம் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், பாஸ்போர்ட் அளவு புகைப்படம்- 3, கல்விச் சான்று, வாக்காளர் அடையாள அட்டை அல்லது பள்ளி, கல்லூரி அடையாள அட்டை, குடும்ப அடையாள அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களைக் கொண்டு வர வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்புக்குப் பின்னர், அசல் சான்றுகள் திருப்பி அளிக்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க விருப்பமிருந்தும், நேர்காணலில் பங்கேற்க இயலாதவர்கள், 94439 84229 என்ற செல்பேசி எண்ணில் வேளாண் ஆராய்ச்சியாளர் த. செல்வராசை தொடர்பு கொள்ளலாம்.

அல்லது 04364 223212 என்ற தொலைபேசி எண்ணில் கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உழவர் பயிற்சி மையத்தில் செயல்திறன் பயிற்சிக்கு இன்று சேர்க்கை முகாம்

திருவாரூர் விளமல் குறிஞ்சி நகரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் செயல்திறன் மேம்பாடு பயிற்சிகளுக்கான சேர்க்கை முகாம் புதன்கிழமை (ஜன. 23) நடைபெறுகிறது.

இதுகுறித்து மையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் மா. கதிர்செல்வன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

உழவர் பயிற்சி மையத்தில் கோழி பண்ணைத் தொழில், செம்மறி ஆடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, உணவுப் பொருள்கள் பதப்படுத்துதல் போன்ற பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த தொழில்களுக்கு விரைவில் செயல்திறன் பயிற்சியளிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சிகளில் சேர்ந்து பயன் பெற விரும்புவோர், திருவாரூர் உழவர் பயிற்சி மையத்தில் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். சேர்க்கை முகாம் காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

# பாசனத்திற்கு மாம்பழத்துறையாறு அணை திறப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாம்பழத்துறையாறு அணையிலிருந்து, பாசனத்திற்காக விநாடிக்கு 50 கன அடி தண்ணீர் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.

கல்குளம் வட்டம், வில்லுக்குறி ஆனைக்கிடங்கு என்ற இடத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே ரூ. 20.97 கோடியில் புதிய அணை கட்டப்பட்டது. மொத்த கொள்ளளவு 44.54 மில்லியன் கன அடியாகும். இந்த அணையில் இப்போது 26.25 அடி தண்ணீர் உள்ளது.

பேச்சிப்பாறை அணையில் 5.25 அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் 37.75 அடி தண்ணீரும் உள்ளது. மாவட்டத்தில் கும்பப்பூ சாகுபடியைக் காப்பாற்ற பொதுப்பணித்துறை பொறியாளர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் பெருஞ்சாணி அணையில் இருந்து இப்போது விநாடிக்கு 350 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மேலும், மாம்பழத்துறையாறு அணையிலிருந்து விநாடிக்கு 50 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்தத் தண்ணீர் பத்மநாபபுரம் புத்தனாறு கால்வாயில் விவசாயத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# வறட்சி மாவட்டமாக அறிவிக்கக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடியை வறட்சி மாவட்டமாக அறிவிக்கக் கோரி ஸ்ரீவைகுண்டம், சாத்தான்குளத்தில் விவசாயிகள் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஸ்ரீவைகுண்டம் ஒன்றியக் குழு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு ஒன்றியத் தலைவர் பொன்ராஜ் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில், தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும், 20 எம்ஜிடி திட்டத்தை கைவிட்டு கடல் நீரை நன்னீராக்கி தொழிற்சாலைகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்,

நிலத்தடி நீரை வியாபாரப் பொருளாக மாற்றுவதை தடை செய்யவேண்டும், மருதூர் அணையிலிருந்து 4-வது பைப் லைன் திட்டத்தில் தண்ணீர் எடுக்கும் முயற்சியை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தாமிரவருணி பாசன விவசாயிகள் பாதுகாப்பு போராட்டக்குழுத் தலைவர் கந்தசாமி, ஒன்றிய விவசாயிகள் சங்கச் செயலர்

கணபதி, கட்டுமான சங்க வட்டச் செயலர் முருகன், ஆழ்வார்திருநகரி ஒன்றிய விவசாய சங்கத் தலைவர் ராஜாங்கம் உள்ளிட்ட பலர் பேசினர்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியப் பொருளாளர் உலகம்மாள், நகரச் செயலர் ராமலிங்கம், ஆழ்வார்திருநகரி பால்ராஜ், ராமச்சந்திரன், சுப்பையா, மூலக்கரை மாயாண்டி,சிவனணைந்தபெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஒன்றியச் செயலர் கணபதி நன்றி கூறினார்.

சாத்தான்குளம்: சாத்தான்குளம் காமராஜர் சிலை முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு வட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் தே.கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட துணைத் தலைவர் கொ.பாலசுந்தரகணபதி முன்னிலை வகித்தார். இதில் விவசாய சங்க மாவட்டத் தலைவர் தி.சீனிவாசன், வட்டச் செயலர் ம.கனகராஜ், துணைத் தலைவர் அ.பாலகிருஷ்ணன், பெ.சங்கரலிங்கம், துணைச் செயலர்கள் சு.மாயாண்டி, மு.ஆறுமுகம், பொருளாளர் ரா.ப.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பேசினர்.

## தினமலர்

### தமிழக அரசு தொடர உள்ள வழக்கு மாண்டியா விவசாயிகள் எதிர்ப்பு

மாண்டியா: "தமிழக விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளதுனர்' என, காரணம் காட்டி, கர்நாடக அரசிடம் நிவாரண நிதி பெற்று தர வலியுறுத்தி, சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்ய, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு கர்நாடக மாண்டியா மாவட்ட விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.இதுதொடர்பாக, மாண்டியா மாவட்ட விவசாயிகள் சங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

கர்நாடக அரசு சரியான நேரத்தில் காவிரி நீர் திறந்து விடாததால், தமிழக விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். எனவே, இதற்கு கர்நாடக அரசிடம், நிவாரண நிதி கேட்டு, சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர, ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளது சரியல்ல.கடந்தாண்டு மழை இல்லாமல், கர்நாடக விவசாயிகள் நஷ்டமடைந்தபோது, நிவாரண நிதி என்ற பெயரில், கர்நாடக அரசு ஒரு பைசாவையும் தந்து உதவ முன்வரவில்லை. இப்போது தமிழக விவசாயிகளுக்கு, நிவாரண நிதி கொடுப்பது எப்படி சாத்தியமாகும்.கர்நாடக அரசை அவ்வப்போது பணிய வைத்து, காவிரி நீரை பெற்றுக் கொள்கிறார் ஜெயலலிதா. தமிழக விவசாயிகளுக்காக, மத்திய அரசிடம் கேட்கலாம்.காவிரி விஷயத்தில் கர்நாடகா அரசு அலட்சியம் காட்டி வருகிறது. முதல்வர் ஷெட்டர், விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் மட்டுமே நடந்து கொள்கிறார்; செயல்பாடுகள் இல்லை.எனவே, மத்திய அரசிடம் நிர்பந்தம் செய்து, காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு வெளியிடுவதை தடுத்து நிறுத்த வேண்டும். தமிழக அரசின் மிரட்டலை ஒதுக்கித் தள்ள வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### விளை நிலங்களை தேடி அலையும் அதிகாரிகள் :இழப்பீடு பறிபோகும் நிலையில் விவசாயிகள்

அழகர்கோவில்:காப்பீட்டுத் திட்டத்தில் நஷ்டஈடு வழங்குவதை தவிர்க்க, விளைச்சல் வயல்களை தேடி அதிகாரிகள் அலைந்து வருகின்றனர். இதனால், இழப்பீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.மதுரையில் மழை பொய்த்ததால், பெரியாறு பாசன கால்வாயில் தண்ணீர் வரவில்லை. கள்ளந்திரி கால்வாயில் பாசனத்திற்கு திறந்த தண்ணீர் 18 நாட்களில் நிறுத்தப்பட்டது. கால்வாய் தண்ணீரை நம்பி விவசாயப் பணிகளை துவக்கிய பலர் நஷ்டமடைந்தனர்.

மழை மற்றும் வறட்சியால் விளைச்சல் பாதிக்கப்படும்போது விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் இழப்பீடு வழங்கப்படுகிறது. இதனால், மதுரையை வறட்சி மாவட்டமாக அறிவிக்கக்கோரி விவசாயிகள் போராடுகின்றனர். ஆனால், வறட்சிப் பிடியில் இருந்து மதுரை தப்பியதாக அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று கள்ளந்திரி, அரும்பனூர், மாத்தூர் பகுதி விளைச்சல் நிலங்களை புள்ளியியல் துறை அதிகாரிகள் கணக்கிட்டனர். மகசூலுக்காக அரசு கணக்கிட்ட வயல்கள் சாவியாகி விட்டதால், எங்கு விளைச்சல் இருக்கிறதோ, அந்த இடத்தை தேடிப் பிடித்து மகசூல் ஆனதாக அதிகாரிகள் கணக்கு காட்டுவதாக விவசாயிகள் குமுறுகின்றனர். இதனால், வறட்சியின் உண்மை நிலவரம் அரசுக்கு தெரியாமல் போகும் அவலம் உள்ளதாகவும், இழப்பீடு கிடைக்க வாய்ப்பு இல்லை என்றும் அவர்கள் புலம்புகின்றனர்.காதர்மைதீன்: ஏழரை ஏக்கரில் விவசாயம் செய்கிறேன். கால்வாயில் தண்ணீர் வரும் முன் நாற்றங்கால் அமைத்து, தண்ணீர் வந்ததும் நடவு செய்தேன். சில நாட்களில், தண்ணீர் நிறுத்தப்பட்டதால், அனைத்தும் காய்ந்து விட்டன. இதனால் ரூ.1.30 லட்சம் நஷ்டம் ஏற்பட்டது. வங்கியில் கடன் பெற்று விவசாயம் செய்தேன். அதிகாரிகளின் தவறான கணக்கீட்டால் இழப்பீடு கிடைக்காத நிலை உள்ளது. இதை தவிர்க்க, கலெக்டர் தலைமையில், வேளாண் துறை, புள்ளியியல் துறை, விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும். அதில், நிவாரணம், காப்பீடு மற்றும் இழப்பீடு குறித்து விவாதிக்க வேண்டும்.

மாயகிருஷ்ணன்:ஏழு ஏக்கரில், 4 ஏக்கர் நடவு செய்தேன். 3 ஏக்கருக்கு நாற்றங்கால் அமைத்திருந்தேன். சில நாட்களிலேயே தண்ணீர் நிறுத்தியதால் அனைத்து பயிர்களும் சாவியாகி விட்டன. நாற்றங்கால் அமைக்க ஏக்கருக்கு ரூ.4 ஆயிரமும், நடவிற்கு ஏக்கருக்கு ரூ.17 ஆயிரமும் என மொத்தம் ரூ.60 ஆயிரம் செலவானது. அரசுக்கு ஆதரவாக செயல்படும் அதிகாரிகளால், இழப்பீடு கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது, என்றார்.

## மாவட்டத்தில் உளுந்து விவசாயம் பாதிப்பு : சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது

கடலூர் மாவட்டத்தில், இந்தாண்டு வடகிழக்குப் பருவமழை ஏமாற்றிய நிலையில், சம்பா நெல் அறுவடை தாமதமானதைத் தொடர்ந்து, உளுந்து பயிரிட முடியாமல் விவசாயிகள் பாதித்துள்ளனர். கடலூர் மாவட்டத்தில் கார்த்திகை பட்டத்தில், டெல்டா அல்லாத விருத்தாசலம், கம்மாபுரம், நல்லூர், அண்ணாகிராமம், பரங்கிப்பேட்டை, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, கடலூர், மங்களூர் ஒன்றியங்களிலும், தை பட்டத்தில் டெல்டா பகுதிகளான குமராட்சி, காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி, கீரப்பாளையம் ஒன்றியங்களிலும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரில் உளுந்து விதைப்பது வழக்கம். ஆண்டுதோறும் சம்பா அறுவடையின்போது உளுந்து அதிகளவில் பயிர் செய்யப்படும்.

விளைச்சல் குறைந்தது

மாவட்டத்தில், பருவ மழை தவறியது, நெல் அறுவடை தாமதம் போன்ற காரணங்களால் ஆண்டு

தோறும், கார்த்திகை, தை பட்டங்களில் உளுந்து பயிரிடும் பரபரப்பளவு வெகுவாக குறைந்து வருகிறது. கடந்தாண்டு கார்த்திகை பட்டத்தில் டெல்டா அல்லாத பகுதிகளில் 32 ஆயிரம் ஏக்கரில் உளுந்து பயிர் செய்யப்பட்டது. இந்தாண்டு பருவ மழை ஏமாற்றிய நிலையில், 25 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே உளுந்து பயிரிடப்பட்டது. கடந்தாண்டைவிட இந்தாண்டு 7,000 ஏக்கர் உளுந்து பரப்பளவு குறைந்தது. மேலும், போதிய மழையின்றி கார்த்திகை பட்ட உளுந்தில், விளைச்சலும் பாதியாக குறைந்ததால் விவசாயிகள் பாதித்தனர்.

**தை பட்டம் பாதிப்பு**

தை பட்டத்தில் டெல்டா பகுதிகளில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கரில் உளுந்து பயிரிடப்பட்டிருந்தது. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட தாமதமானதால், சம்பா நடவு 20 நாட்களுக்கும் மேல் தாமதமானது. சம்பா அறுவடையும் தாமதமாக துவங்கியதால், இந்தாண்டு உரிய தை பட்டத்தில் உளுந்து விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

டெல்டா பகுதிகளில் பனிப் பொழிவின் ஈரப்பதம் மூலமே உளுந்து விளையும். பனிப் பொழிவு காலம் முடியும் தருவாயில் உள்ளதால் விவசாயிகள் உளுந்து விதைப்பதில் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் தைப்பட்டத்தில், சாகுபடி பரப்பளவு வெகுவாக குறையும் சூழல் ஏற்பட்டுள்ளது.

**60 ஆயிரம் ஏக்கரில்**

கடலூர் வேளாண் துறை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், "கடலூர் மாவட்டத்தல் கடந்தாண்டு கார்த்திகை, தை பட்டங்களில் 1 லட்சத்து 52 ஆயிரம் ஏக்கரில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டது. ஏக்கருக்கு நான்கு மூட்டைகள் வரை (400 கிலோ) அறுவடை செய்யப்பட்டது. குறைந்த பழுவ மழையால், இந்தாண்டு கார்த்திகைப் பட்டத்தில் உளுந்து சாகுபடி பரப்பளவு குறைந்தது.

பூக்கும் தருணத்தில் நிலவிய கடுமையான வறட்சியால் விளைச்சல் குறைந்தது. அதேப் போல் சம்பா நடவு தாமதமானதால், தைப்பட்டத்தில், டெல்டா பகுதிகளில் உளுந்து விதைக்கும் பரபரப்பளவு குறைய வாய்ப்புள்ளது.

இந்தாண்டு 60 ஆயிரம் ஏக்கர் உளுந்து விதைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தை பட்டத்தில் விதைக்கத் தேவையான விதை உளுந்து வேளாண் அலுவலகங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது' என்றார்.

*ரப்பர் இறக்குமதி குறைவு*